**THE LABOUR COURT, SALEM**
**I.A.No.1/2026 in**
**I.D.No. 141 of 2009**

**01.09.2026**

**PW1 – K. சுரேஷ்குமார், த/பெ. கந்தசாமி**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி – (எதிர்மனுதாரர் தரப்பில்)

ம.சா.ஆ.1 துணை விதி பக்கம் 46ல் விதி எண்.6ல் பதிவாளரின் அனுமதிக்கு உட்பட்டும் நிர்வாக குழுவால் உருவாக்கப்படும் ஒழுங்குமுறைகள் துணை விதிகள், விதிகள் மற்றும் சட்டத்தின் படி பணியாற்ற செயலாளர் கடமைப்பட்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. பொதுவாக செயலாளர் என்பவர் நிர்வாக குழு (Board) அல்லது செயலாட்சியர் (Administrator) ஆகியோருக்கு கட்டுப்பட்டு செயல்பட்டு வரும் பணியாளர் என்றால் சரி. நிர்வாக குழு அல்லது செயலாட்சியர் ஆகியோர் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம் உள்ளவர்கள் என்றால் சரி. பணியாளர்களுக்கு அல்லது பணியாளர்களுக்கிடையே ஊதிய முரண்பாடு ஏற்பட்டால் அதை தீர்மானிக்கும் அதிகாரம் வீட்டு வசதி துறை துணைப் பதிவாளருக்கு உள்ளது என்றால் சரி. பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம் பதிவாளரின் அனுமதிக்கு உட்பட்டு நிர்வாக குழு அல்லது சங்க செயலாட்சியர் ஆகியோருக்கு உள்ளது என்றால் சரி. வீட்டு வசதி துறை துணைப்பதிவாளரின் அனுமதிக்கு

உட்பட்டு நிர்வாக குழு அல்லது செயலாட்சியர் பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயித்து கொடுப்பார்கள் என்றால் சரி. பணியாளர்கள் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நிர்வாக குழு அல்லது செயலாட்சியருக்கு உள்ளது என்றால் சரி. பணியாளர்களை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் நிர்வாக குழு அல்லது செயலாட்சியருக்கு உள்ளது என்றால் சரி. பதிவாளரின் அனுமதிக்குட்பட்டு சங்கத்திற்கு தொழில் தகராறு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படும் என்றால் சரி. நிர்வாக தரப்பில் மேற்படி தொழில் தகராறு ஒப்பந்தங்களில் நிர்வாக குழுவின் தலைவரோ அல்லது செயலாட்சியரோ கையெழுத்து போடுவார்கள் என்றால் சரி. மேற்படி ஒப்பந்தங்களில் சங்க பணியாளர்கள் அனைவரும் பணியாளர்கள் தரப்பில் கையெழுத்து போடுவார்கள் என்றால் சரி. சங்க உறுப்பினர்களுக்கு கடன் அனுமதிக்கும் அதிகாரம் நிர்வாக குழு அல்லது செயலாட்சியருக்கு உள்ளது. முறையான ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் உறுப்பினர்களின் கடன் விண்ணப்பத்தை நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாக குழு அல்லது செயலாட்சியருக்கு உள்ளது என்றால் சரி. 08.05.2001 தேதி வரை சங்கமானது நிர்வாக குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது என்றால் சரி, குறிப்பாக தேதி நியாபகம் இல்லை. 2001 ஆம் ஆண்டு சங்கத்தின் நிர்வாக குழு கலைக்கப்பட்ட பிறகு வீட்டு வசதி சங்க துறை அலுவலர் தனி அலுவலராக சங்கத்திற்காக நியமிக்கப்பட்டார் என்றால் சரி. தனி அலுவலர்

நியமிக்கப்படும்போது ஒரு சங்கம் மட்டுமல்லாமல் பல்வேறு சங்கங்களுக்கு நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்படுவார்கள் என்றால் சரி. அவ்வாறு நியமிக்கப்படும் போது பணியாளர்களுக்கு கடமைகளையும் பொறுப்புகளையும் தனி அலுவலர் வகுத்துகொடுப்பார் என்றால் சரி. ம.சா.ஆ.2 ஆவணம் அப்போதைய தனி அலுவலரால் பணியாளர்களுக்கென வரையறுத்து கொடுக்கப்பட்ட கடமைகளும் பொறுப்புகளும் குறித்த தீர்மானம் என்றால் சரி. அந்த காலகட்டதில் சங்கத்தில் மொத்தம் 7 பணியாளர்கள் பணிபுரிந்து வந்தோம். ம.சா.ஆ.2 ஆவணத்தில் 3 முதல் 9 வரையான தீர்மானங்கள் மேற்படி 7 பணியாளர்களுக்குரிய கடமைகளும் பொறுப்புகளும் சம்பந்தப்பட்டது என்றால் சரி. 7வது தீர்மானம் அப்போது இளநிலை எழுத்தராக பணிபுரிந்த எனது பணிக்கான தீர்மானம் என்றால் சரி. தொழில் தகராறு தாவா I.D.No.141/2009 ல் முதல் நிலை விசாரணையின் போது 16.03.2026 ஆம் தேதி நிர்வாக தரப்பில் எழுத்து மூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி வாதுரையில் முக்கியமாக இரண்டு சரத்துகளை முதன்மைபடுத்தி கூறியுள்ளோம் என்றால் சரி. அதில் முதலாவதாக மனுதாரர் சங்கத்தின் பணியாளர் என்ற வரையறைக்குள் வரமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரி. இரண்டாவதாக நிர்வாகத்தால் நடத்தப்பட்ட உள்விசாரணை (Domestic enquiry) சரியானது என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால்

சரி. கடந்த 23.03.2026 ஆம் தேதி இந்நீதிமன்றம் முதல் நிலை விசாரணையில் (Preliminary Enquiry) மேற்சொன்ன இரண்டு எங்கள் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பிறகு எங்கள் தரப்பு வாதத்தை நிராகரித்து உத்தரவிட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த மனுவில் நாங்கள் கோரியிருக்கும் பரிகாரம் ஏற்கனவே பிரதான வழக்கான I.D.No.141/2009 ல் எங்களால் கேட்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தால் முதல் நிலை விசாரணையில் 23.03.2026 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரி. அவ்வாறு மேல்முறையீடு தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்துள்ள இந்த இடைநிலை மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

MUNUSAMY Digitally signed by MUNUSAMY Date: 2026.09.01 15:55:55 +0530

Presiding Officer,
Labour Court, Salem.